Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 76/2018

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Father | : பாண்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05 day of 06.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது திருமோகூரில் குடியிருந்து கொண்டு டிரைவராக பணியாற்றி வருகிறேன். அசா1 செல்லம்மாள் எனது அம்மா, அசா2 மணிகன்டன் எனது தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 10 வருடத்திற்கு முன்னர் எனது தாயார் திருமோகூரில் உள்ள எங்கள் வீட்டிற்கு வெளியே துணி காய வைத்துக்கொண்டிருந்தபோது யாரோ அவரது 3 பவுன் செயினை அறுத்துவிட்டதாக எனது சகோதரி அழகுமீனா போன் செய்து தகவல் சொன்னார். அப்போது நான் திருமோகூர் கோவிலிருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன். நகையை திருடிச்சென்றவர்களை அக்கம் பக்கத்தினர் தேடி சென்றார்கள். நகையை திருடி சென்றவர்களை பிடிக்கமுடியவில்லை. அதன்பின்னர் ஒரு மணிநேரத்திற்குள் நான், எனது தம்பி மணிகன்டன், எனது அம்மா செல்லம்மாள் ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம், போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சிறிது நாட்களிலேயே ஒத்தக்கடை காவல் நிலையத்திலிருந்து நகை கிடைத்ததாக போன் செய்தார்கள். நான், எனது தம்பி மணிகன்டன் மற்றும் எனது தாயார் ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு எனது தாயார் 3 பவுன் நகையை அடையாளம் காட்டினோம். என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைதான் எனது தாயாரின் 3 பவுன் செயின் நகை

ஆகும். போலீசார் யாரிடமிருந்து நகையை கைப்பற்றினோம் என்று சொன்னார்கள், ஆனால் பல வருடங்கள் ஆகிவிட்டதனால் தற்போது ஞாபகத்தில் இல்லை.

**எதிரிகள் ஆஜர்.**

( எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. )

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 76/2018

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகு மீனா | Father | : பாண்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 05 day of 06.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் திருமோகூரில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அசா1 செல்லம்மாள் எனது தாயார். அசா2 மணிகன்டன் எனது தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 15 வருடத்திற்கு முன்னர் நானும், எனது தாயாரும் ஒரே வீட்டில்தான் இருந்து வருகிறோம். ஒரு நாள் எனது தாயார் சாப்பிட்டுவிட்டு வீட்டிற்கு வெளியே துணியை காய வைத்துக்கொண்டிருந்தபோது எனது தாயாரின் 3 பவுன் செயினை யாரோ ஒருவர் அறுத்து சென்றுவிட்டார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனது தாயார் செயினை காணவில்லை என்று தேடியபோது என்னிடம் யாரோ அறுத்து சென்றுவிட்டதாக என்னிடம் சொன்னார். அதன்பின்னர் எனது தாயார் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் செயின் காணவில்லை என்று புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பின்னர் ஒரு மாதத்திற்குள் நகை கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொல்லி எனது தாயார் சென்று பார்த்து அடையாளம் காண்பித்தார். அதன்பின்னர் எனது தாயார் நகையை பெற்றுக்கொண்டார்.

**எதிரிகள் ஆஜர்.**

( எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. )

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 76/2018

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணிகன்டன்** | ௱ Father/Husband Name | : **பாண்டி சேர்வை** |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 05 day of 06.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது திருமோகூரில் குடியிருந்துகொண்டு வாடகை வண்டி டிரைவராக இருந்து வருகிறேன். அசா1 செல்லம்மாள் எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 11 வருடத்திற்கு முன்னர் திருமோகூரில் உள்ள எனது தாயார் வீட்டிற்கு எதிரே எனது தாய் துணியை காயபோட்டுக்கொண்டிருந்தபோது அவரது செயினை யாரோ அறுத்துவிட்டு சென்றதாக சத்தம்போட்டார். நான் எனது தாயார் வீட்டிற்கு அருகே தான் எனது வீடு. அங்கு நான் சாப்பிட்டுகொண்டிருந்தபோது எனது அம்மாவின் சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தேன். அப்போது எனது அம்மாவின் 3 பவுன் செயினை அறுத்துவிட்டு கிழக்கு பக்கமாக 2 நபர்கள் ஓடினார்கள். நான் அவர்களை துரத்தி சென்றேன். அவர்களை பிடிக்க முடியவில்லை என்பதனால் அதன்பின்னர் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் நான் எனது அண்ணன் முருகன், எனது தாயரை அழைத்துக்கொண்டு சென்று புகார் கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டபடும் புகார் மனுவில் அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த அறிவேன் சாட்சி கையொப்பம் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அந்த புகார் மனுவில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சுமார் 3 முதல் 6 மாதத்திற்குள் ஒத்தக்கடை காவல் நிலையத்திலிருந்து எனது அண்ணன் முருகனுக்கு போன் செய்து நகை கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். நான் காவல் நிலையத்திற்கு சென்று அந்த செயினை அடையாளம் காட்டினேன். அதை யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று போலீசார் சொன்னார்கள், ஆனால் தற்போது ஞாபகத்தில் இல்லை. என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின்தான் எனது தாயாரிடமிருந்து திருடப்பட்ட நகை ஆகும். (அந்த புகைப்படம் 2 எண்ணிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) அதன்பின்னர் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து எனது தாயார் நகையை திரும்ப பெற்றுக்கொண்டார்.

**எதிரிகள் ஆஜர்.**

( எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. )

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 76/2018

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்லம்மாள் | Father/Husband Name | : பாண்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 05 day of 06.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் திருமோகூரில் குடியிருந்து வருகிறேன். எனது வயது 93 ஆகும். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வயதாகிவிட்டதனால் புகார் கொடுத்தது பற்றி எனக்கு தற்போது ஞாபகத்தில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகம் இல்லை.

எதிரிகள் ஆஜர்

( எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. )